## ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் - 2020

ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத் இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை மாதிரி வேலையின் ஒன்றிணைந்த பகுதியாக உண்டாக்குதல் மற்றும் மேல், வடமேல், மத்திய, தென் மற்றும் சபரகமுவ மாகாணங்களில் தேசிய நெடுஞ்சாலைகளின் 202 கிலோமீற்றரை தரமுயர்த்துதல் அதேபோல் பாலங்களின் மீள்நிர்மானம் மற்றும் அகலமாக்கல் மூலம் போக்குவரத்து துறையில் துரிதமாக அதிகரிக்கின்ற தேவையை எதிர்கொள்வதற்கு வீதி வலையமைப்பு இணைப்பை முன்னேற்றுவதை இலக்காக கொள்ளல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,121.32 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.46 மில்லியனானதுடன் அதில் ரூபா 4,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 2,561.32 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 22.46 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 சனவரி 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2019 திசெம்பர் 31 வரை 02 முறை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 4 ஒப்பந்த பொதிகளின் நிர்மான வேலைகள் ரூபா 4,255 மில்லியன் கிரயத்தில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் 2020 திசெம்பர் 31 வரை கூட அவைகள் பூர்த்தியாக்கப்பட்ட வேலைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை அல்லாச் சொத்துக்களின் குறை மதிப்பீடு. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்களினது மிகுதி நடைமுறை வேலைகளை மூலதனமாக்க கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் பொதுதிறைசேறியினால் பராமரிக்கப்பட்ட பதிவுகள் என்பனவற்றின் பிரகாரம் கடன் வழங்கள்களிலிருந்து பயன்படுத்தப்பட்ட மொத்த செலவினங்கள் ரூபா 111.89 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்தது. இருப்பினும் உரிய தொகை வெளிவளங்கள் திணைக்களத்தின் பதிவுகளில் ரூபா 80.55 மில்லியன் என காட்டப்பட்டிருந்தது. மேலும் வித்தியாசம் ரூபா 31.34 மில்லியன் ஒரு தொகை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கடனின் கீழ் பதிவுசெய்வதற்கு பதிலாக மீளப்பெறத்தக்க வெளிநாட்டு உதவியாக காட்டப்பட்டிருந்தது. | குறைந்தளவான பதிவேடுகள் காரணமாக நிதிகளை முறைகேடாக பயன்படுத்தக்கூடிய சாத்தியம். | 2021 ஆம் ஆண்டிலிருந்து வெளிவளங்கள் திணைக்களத்தின் பதிவுகளின் பிரகாரம் மீளப்பெறல்களை பதிவுசெய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | மிகுதிகளை இணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் எஹலியகொட பி.செ அலுவலகத்துடன் தொடர்புபட்ட காணி சுவீகரிப்பு மீதான தாமத வட்டிக்காக ரூபா 1 மில்லியனான ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும், அம்மிகுதியை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் செயற்திட்டத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் குறை / மிகை மதிப்பீடு. | கோவிட் 19 நிலமை காரணமாக, பிரதேச செயலகத்திடமிருந்து பெறப்பட்ட ஓர் அண்ணளவான தொகையினை நாங்கள் உள்ளடக்கியுள்ளோம். | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.01/2019 இன் பிரிவு 9.3. | செயற்திட்ட கண்காணிப்பு குழுவானது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட வேண்டும். இருப்பினும் செயற்திட்டத்தின் கண்காணிப்பு குழுவானது 2020 ஆம் ஆண்டு காலத்தின் போது கூடியிருக்கவில்லை. | உடன்பட்டனர். | அனைத்து கண்காணிப்பு குழுக்களும் சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அமுல்படுத்தப்பட வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் 04 நிர்மான ஒப்பந்தங்களும் பூர்த்தியானதன் பின்னர் ஏ005 - பேராதெனிய - பதுள்ள செங்கலடி வீதியின் புனர்நிர்மானமானது 2017 ஜூன் 09 இல் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்ட் 26 இல் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும் அது 2021 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு கூட பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் மந்தகதியான செயற்திட்ட முகாமைத்துவமானது செயற்திட்டத்திற்கு மேலதிக கிரயத்தினை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டலாம். | ஒப்பந்ததாரர் 2021 நவம்பர் 30 இல் உள்ளவாறு 92% செயலாற்றலை அடைந்துள்ளதுடன் மேலும் தாமதமின்றி செயற்திட்டத்தினை பூர்த்திசெய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளார். | புனரமைப்பு வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| உரிய ஒப்பந்ததாரரின் கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழாக செய்யப்பட்ட ஏற்பாட்டிற்கு முரனாக செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரரினை அனுமதிப்பதனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீதான அளவைப்பட்டியலின் வேறான கொடுப்பனவு உருப்படிகள் செய்யப்பட்டிருந்தது. அதன்படி ஒப்பந்ததாரரிற்கு ஓர் பாரிய கூட்டு மொத்தமாக கொடுப்பனவு உருப்படி 119.2(1) இன் கீழாக கூட்டுமொத்தம் ரூபா 1 மில்லியன் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற்றுக்கொள்ள பேராதெனிய – பதுளைசெங்கலடி வீதி ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த தரவில் ஓர் தொகை காட்டப்படாவிட்டால் இவ் உபபிரிவுகள் பயன்படுத்தப்படாமல் போகும். எனவே அது செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்திற்கான கொடுப்பனவு உருப்படி வழங்கப்பட்டிருந்தது. | அளவைப்பட்டியல்களின் மீளாய்வு விலைமனு ஆவணங்களை வழங்க முன்னர் பெறுகை நிபுனர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு என்பவற்றினால் செய்யப்படல் வேண்டும். |

**3.3 காணி சவிகரிப்புடன் தொடர்புடய விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 208.6 மில்லியனான ஒரு தொகை 2,829 காணித்துண்டுகளிற்கான இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 29.57 மில்லியன் தாமத வட்டியாக 168 காணித்துண்டுகளிற்கு செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. 146 காணித்துண்டுகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்ப சட்டத்தின் உபபிரிவு 44 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். | காணி சுவீகரிப்பு செயன்முறையினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |